https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# உவமையில் புறம்

**முனைவர் ப. கலைகேசவன்**
உதவிப்பேராசிரியர்
மொழிகள்த்துறை – தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர் கல்விக்கழகம்
கோவை – 21.

## ஆய்வுசுருக்கம்

செவ்வியல் இலக்கியங்களில் தனி இடம் பிடிப்பன சங்க இலக்கியங்கள் ஆகும். அவ்வாறான சங்க இலக்கியங்களில் பண்டைய தமிழர்களின் வாழ்வும் அவர்களின் பண்பாடும் பறைசாற்றும் விதமாக சங்க செய்யுட்கள் அமைந்துள்ளன. மனிதன் அகம், புறம் என இருவேறு நிலைகளில் தனது வாழ்க்கையையும் வாழ்வியலையும் மேற்கொண்டு வந்துள்ளனர் என்பதை சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. இச்சங்க இலக்கியங்களில் இடம் பெறும் உவமைகளில் அக இலக்கியங்களில் புற இலக்கிய போர் கருவிகள், போர் செயல்பாடுகள், போருக்கு தேவையான ஆயுதங்கள் இதனை எல்லாம் உவமைகளாக சங்க புலவர்கள் தங்களது பாடல்களில் எடுத்து இயம்பியுள்ளனர். அவ்வாறு இடம் பெறும் போர் குறித்த செய்திகள் அக இலக்கியங்களில் தலைவியின் மாண்புரைப்பனவாகவும், தலைவனின் தன்மையை உரைப்பனவாகவும் அமைந்துள்ளன.

**திறவுச்சொற்கள்:** அகம், புறம், போர், உவமை

## முன்னுரை

ஒரு செய்யுளில் உவமை, உருவகம் போன்றவை அதன் உள்ளடக்கத்தின் அடர்த்தியைக் கூட்டுகின்றன. அவ்வகையில், சங்க இலக்கியங்கள் உவமைகள் என்னும் நலனானது வெகு சிறப்பாகக் கையாளப் பெற்றுள்ளன. மேலும், அக இலக்கியங்களில் புறச்செய்திகளை எடுத்தியம்புவனவாக இருக்கின்றது. அவை கதைப்போக்கிற்கு ஏற்ப எவ்வித இடைசெருகலும் முகச்சுளிப்பு, இன்றியும் அதீத கற்பனையும் இன்றி இயல்பாக வாழ்வியலோடு இணைந்த உவமைகளை இப்பனுவலில் காண முடிகிறது.

## உவமை

ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடையே உள்ள ஒப்புமையை எடுத்துக் கூறுவது உவமை அணி ஆகும். பலபொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமையும் காட்டப்படலாம். பொருள்களுக்கு இடையே உள்ள பண்பு ஒப்புமை,தொழில் ஒப்புமை, பயன்ஒப்புமை ஆகியவை காரணமாகஉவமை அமையும். ஆகவே அடிப்படையில் பண்பு உவமை, தொழில்உவமை,பயன் உவமை என உவமை மூன்று வகைப்படும். உவமை அணியின் இலக்கணத்தை,

பண்பும் தொழிலும் பயனும் என்று இவற்றின்

ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்ந்து

ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை *(தண்டி, நூற்பா. 30)*

மேற்காணும் நூற்பா விளக்குகிறது.

**உவமையில் போர்**

சங்க அக இலக்கியங்களில் தலைவன், தலைவியின் வாழ்வியல் நிலைப்பாடுகள் மற்றும் அவர்களின் பண்பாட்டு நிலைகளை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. அவ்வாறு எடுத்துக்கூற முயலும் புலவர்கள் அங்கு உவமைகளுக்காக புறச்செய்தியையும் கையாண்டுள்ளணர். முல்லைப்பாடலில்,

**"அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்**
**சிதர்வரல் அசைவளிக்கு அசைவந் தாங்கு,**
**துகில்முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்குநடைப்**
**பெருமூதாளர் ஏமம் சூழ..."** *(முல்லை 51 - 54)*

மேற்காணும் அடிகளில் ஓர் உவமை உள்ளீடாக அமைந்துள்ளது. அதாவது, மண்ணிற்குக் காவல் புரியும் வயது முதிர்ந்த, நம்பிக்கைக்குரிய ஆண்கள் தங்களின் தலையில் வெள்ளாடையினால் தலைப்பாகை அணிந்துகொண்டு இரவில் காவல் புரிகின்றனர். அவர்களின் அரைத்தூக்கக் கலக்கத்தில் கால்நடை தளர்ந்தும் தலை தன் வசமின்றி, அசைந்து ஆடியும் நிற்கிறது. இதனைக் கற்பனை வட்டத்திற்குள் செலுத்தும் புலவர் இயற்கையோடும் முல்லைத் திணையின் இயல்போடும் இணைத்துக் கூறுகிறார். அது, காட்டில் பூத்திருக்கும் முல்லைக் கொடியின் மலர்கள் இரவில் அங்குமிங்கும் அசைந்தாடுவதைப் போன்று உள்ளது என்று உவமிக்கிறார். இது மிகவும் இயல்பான உவமையாக அமைந்து ள்ளதைக் காணலாம். மேலும், புற உவமையாக,

**"எடுத்துஎறி எஃகம் பாய்தலின், புண்கூர்ந்து,**
**பிடிக்கணம் மறந்த வேழம்; வேழத்துப்**
**பாம்பு பதைப்பன்ன பரூஉக் கை**
**துமிய..."** *(68-70)*

என்ற வரிகளில் போரில் யானையின் தும்பிக்கை வெட்டப்பட்டு கிடப்பதை எடுத்துக்காட்டும் புலவர். அது அடிபட்ட பாம்பு எப்படி 'குத்துயிரும் குலையுயிருமாக' துடிக்குமோ அதுபோல, வெட்டப்பட்ட தும்பிக்கையானது துடித்துக் கொண்டிருக் கிறது என்பதனைக் கண்முன் காட்சிப்படுத்து கிறார். இங்கு அஃறினைக்கு அஃறினை உயிரினத்தினை ஒப்புமைப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. புலவர் தம் வாழ்நாளில் கண்ட, செய்திகளையே உவமையாகக் காட்டுகிறார். ஆக, பாம்பும் ஏதோவெரு சூழலில் காயம்பட்டிருக்கும் என்பதனையும் உய்த்துணரலாம். மேலும்,

**"நீடுநினைந்து, தேற்றியும், ஓடுவளை திருத்தியும்,**
**மையல் கொண்டும், ஒய்யென உயிர்த்தும்,**
**ஏஉறு மஞ்ஞையின் நடுங்கி,**
**இழைநெகிழ்ந்து..."** *(முல்லை 82 - 84)*

மேற்கண்ட செய்தியோ ஒரு புறச்செய்தி. இது அகம் சார்ந்த செய்தியாகும். அதாவது, தலைவியின் பிரிவு நிலையினை எடுத்துரை க்கும் புலவர் அம்புபட்ட மயில் எவ்வாறு துடிதுடிக்கின்றதோ அதுபோன்று தலைவியா னவள், தலைவனின் பிரிவுத் துயரால் வாடி வதைபடுகிறாள் என்பதனைக் குறிக்கிறது.

**கணை**

**நல்லறி விழந்த காமம்**

**வில்லுமிழ் கணையிற் சென்றுசேட் படவே**
*(குறுந். 231 5-6)*

என்ற குறுந்தொகை பாடலில் நாணத்தை அழித்து, நன்மை தீமைகளை உணரும் அறிவை இழந்த என்னுடைய காமம், வில்லால் எய்யப்பட்ட அம்பைப் போல, நெடுந்தூரத்தில் விழுந்து அழியும்படி, அயலாருடைய சுடுகாட்டைக் கண்டால் விலகிச் செல்லுவது போல் நம்மைக் கண்டும் காணாதவர் போல் விலகிச் செல்கிறார் என்பதனை உவமை வழி புலவர்

விளக்கியுள்ளதனைக் காணமுடிகிறது.

**“வரையிடைக் கழுதின் வன் கைக் கானவன்**

**கடு விசைக் கவணின் எறிந்த சிறு கல்**

**உடு உறு கணையின் போகி”**

(அகம் 292 10-12)

என்ற அகநானூற்று பாடலில் காட்டில் மேயவேண்டிய யானை அதனை விட்டுவிட்டு இரவில் வயலில் மேய வருகிறது. அது காலடி வைத்து நடந்து வரும் ஓசையைக் கேட்ட கானவன் நள்ளிரலில் மலை நடுவில் கட்டி வைத்திருக்கும் பந்தலாகிய கழுதின் மேல் ஏறி இருந்து கொண்டு, தன் வலிமை மிக்க கையால் கவணில் கல் வைத்து எறிகிறான். அந்தக் கல் வானத்தில் எரிமீன் விழுவது போல மிக்க விசையுடன் செல்கிறது என்னும் செய்தியைப் பதிவு செய்துள்ளதனையும் காணலாம்.

**வில்**

**“விடுகணை வில்லொடு பற்றிக் கோடிவர்பு**

**வருநர்ப் பார்க்கும் வன்கண் ஆடவர்”**

(குறுந் 274 3-4)

என்ற குறுந்தொகை பாடலில் அடிப் பக்கத்தை உடைய உகாய் மரத்தின், மணியைப் போன்ற, செறிந்த பழங்கள் உதிரும்படி, விடுகின்ற அம்பை வில்லோடு பிடித்து, உயர்ந்த இடத்தின் மேல் ஏறி, வழியிலே வருபவரைப் பார்க்கும் ஆறலைக் கள்வர், தமது நீர் வேட்கையினால் மரப் பட்டையை மென்று அந்த வேட்கையைத் தணித்துக் கொள்ளும் துன்பம் தருகின்ற காடும் நமக்கு இனியதாகும். இச்செய்யுளில் ஆரலைக் கள்வர்களின் நிலைப்பாட்டையும், அதற்கு உபயோகப்“படுத்திய உவமையும் காணமுடிகிறது. மேலும்,

**“கொல் வினைப் பொலிந்த, கூர்ங் குறும் புழுகின்,**

**வில்லோர் தூணி வீங்கப் பெய்த”** (அகம்91-3)

என்ற அகநானூற்று பாடலில் புழுகு என்பது அம்பு நுனியில் செருகப்படும் இரும்பை பற்றி குறிப்பிடுகிறார். கொலைப் புரிகின்ற அம்பினை இங்கு விரிவாக காட்டப் பட்டுள்ளதனை அறியமுடிகிறது.

**“கிடின் என இடிக்கும் கோல் தொடி மறவர்**

**வடி நவில் அம்பின் வினையர் அஞ்சாது”**

(நற்றிணை 48 7-8)

என்ற வரிகளில் வில்லில் இருந்து அம்பின் செயல்பாடுகளை இடி போன்ற முழக்கத்துடன் வழிப்பறி மறவர்கள் அங்குத் தோன்றுவர். அவர்கள் கையில் தொடி அணிந்திருப்பர். கூர்மையான அம்பு எய்வதில் அவர்கள் வல்லவர்கள். அவர்களுக்கு அஞ்சாமல் போர் செய்து வரவேண்டும் என்ற செய்தியையும் இங்கு காணப்படுகிறது. மேலும், அகநானூற்றில்,

**“சிலை மாண் வல் வில் சுற்றி, பல மாண்”**

(அகம் 69 15)

என்ற வரிகளில் பெண்மயிலோடு உறவு கொள்ளும்போது ஆண்மயில் உதிர்த்த மயில் பீலியைப் பல அடுக்குகளாக வைத்து அணி செய்யப்பட்ட வில்லையும் அம்பையும் கையிலே கொண்டு கோட்டைகள் பலவற்றை அழித்து அதிலிருந்த செல்வ வளங்களை தன் நாட்டுக்குக் கொண்டுவந்தவன் ஆய்-அரசன் என்று கூறுவதில் உவமையின் பயன் பாட்டை காணமுடிகிறது.

**வய வாள் எறிந்து, வில்லின் நீக்கி,**

**பயம் நிரை தழீஇய கடுங்கண் மழவர்,**

**அம்பு சேண் படுத்து வன்புலத்து உய்த்தென**

(அகம் 309 1-3)

என்ற வரியிலும், மழவர் ஆனிரை (பசு-மந்தை) கவர்ந்து வருவர். வாள், வில் கொண்டு போரிட்டு எதிர்ப்போரை வென்று கவர்ந்துகொண்டு வருவர். பசுக்களை வேப்ப மரத்தடிக் கடவுள் முன் நிறுத்தி வழிபடுவர் என்பதனையும் காணமுடிகிறது.

**கவண்**

**வல் வாய்க் கவணின் கடு வெடி ஒல்லென,**

**மறப் புலி உரற, வாரணம் கதற,**

**நனவுறு கட்சியின் நல் மயில் ஆல,**

மலை உடன் வெரூஉம் மாக் கல் வெற்பன்
(அகம் 392 12-17)

என்ற வரிகள் பெருமழை பொழிந்து காடே இருண்டுகிடக்கும் நள்ளிரவில் உயர்ந்த கழுதுப் பந்தலில் இருந்துகொண்டு காவல் காக்கும் சேணோன் கவணில் வீசிய கல்லின் அடி பட்டு தினை வயலில் மேய்ந்த யானை தன் இனத்துடன் ஓடும். கவண் கல் பாயும் இடியோசை கேட்டு மறம் கொண்ட புலி உறுமும். காட்டுக் கோழியின் சேவல் கதறும் இவ்வாறான செயல்பாடுகளை உவமை களின் வழி விளக்கப்படுகிறது. மேலும், குறுந்தொகையில்,

"ஏனல் காவலர் கவணொலி வெரீஇக்

கான யானை கைவிடு பசுங்கழை

மீனெறி தூண்டிலி னிவக்கும்" (குறுந் 54 2-3)

மீன் பிடிப்பவர்கள், மீன் தூண்டிலில் சிக்கியதை உணர்ந்து தூண்டிலை விரைவாக மேலே தூக்குவதைப்போல் தினைப் புனங் காப்பவர்கள் விடும் கவண்கல்லின் ஒலிக்கு அஞ்சி விரைவாகக் காட்டு யானை கைவிட்ட பசுமையான மூங்கில் உள்ள காட்டுக்குரிய தலைவனோடு சென்றொழிந் தது என்னும் செய்தியில் கவண் வில்லின் செயல்பாட்டினை கவண் வில்லுக்கு உவமை யாக புலவர் பயன்படுத்தியுள்ளதனை அறிய முடிகிறது.

## முடிவுரை

சங்க இலக்கியங்கள் மனித வாழ்வின் இன்றியமையாத பண்பாட்டின் கருவூலமாக திகழ்கின்றது. அவ்வாறான பண்பாட்டில் அகம், புறம் என்னும் நிலைப்பாடுகளில் அகத்தில் புறச் செய்தியையும், புறத்தில் அகச்செய்தியையும் புலவர்கள் தங்களது செய்யுட்களில் அதிகமாக கையாண்டுள்ள தனை அறியமுடிகின்றது.

ஒவ்வொரு அகச்செய்திகளும் ஏதாவது ஒரு புறச்செய்தியை வெளிப்படையாகவோ அல் லது மறைமுகமாகவோ எடுத்தியம்பியுள்ள தனை காணலாம். போர் கருவிகளை தலைவிக்கோ அல்லது ஏதாவது ஒரு அகச்செய்தியை வெளிப்படுத்தும் போதோ தங்களது செய்யுட்களில் பயன்படுத்துவதை நம்மால் நன்கு உணரமுடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. இராகவையங்கார். ரா, அகநானூறு மூலமும் பழைய உரையும், கம்பர் விலாசம், 1923
2. சக்திதாசன், கலித்தொகை மூலமும் விளக்கமும், அன்பு வெளியீடு, 59, பிராட்வே சென்னை - 1 1958
3. சாமிநாதையர்.உ.வே., நற்றிணை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல், நிலையம், சென்னை - 90
4. சாமிநாதையர்.உ.வே., ஐங்குறுநூறு மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல், நிலையம், சென்னை - 90
5. சாமிநாதையர்.உ.வே., பரிபாடல் மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல், நிலையம், சென்னை - 90
6. சாமிநாதையர்.உ.வே., குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல், நிலையம், சென்னை - 90
7. சாமிநாதையர்.உ.வே., புறநானூறு மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல், நிலையம், சென்னை - 90
8. சாமிநாதையர்.உ.வே., பதிற்றுப்பத்து மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல், நிலையம், சென்னை - 90
9. சாமிநாதையர். உ.வே., பத்துபபாட்டு மூலமும், நச்சினார்கினியருரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல், நிலையம், சென்னை - 90